www.padippakam.com

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

16.03.1985

Thamilar Nallanpuri Mantram

செய்தி ஆசிரியர்,

-----------

சென்னை.

கேந்திர சிங்கள நகரம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்

பொலிஸ், புகையிரத நிலையங்கள் சேதம்.
9பொலிஸார் கொல்லப்பட்டனர்.

வட மத்திய மாகாணத்தில் கேந்தர முக்கியத்துவம் வாய்ந்த சிங்கள நகரமான மதவாச்சி மீது விடுதலைப் புலிகளின் கெரில்லா அதிரடிப் படையொன்று திடீர்த் தாக்குதலை நடத்தி பெரும் சேதத்தை விளைவித்தது. முதன் முதலாக ஒரு சிங்களப் பிரதேசம் மீது நடைபெற்ற இத் தாக்குதல் சிங்கள இனவாத அரசுக்கு பெரும் திகிலை ஏற்படுத்தியது.

இச் சம்பவம் மார்ச் 13ந் திகதி அதிகாலை 3மணியளவில் நடைபெற்றது. இரவோடு இரவாக இந்த சிங்கள எல்லைப் புற நகருக்குள் புகுந்து விடுதலைப் புலி வீரர்கள் முதலில் மதவாச்சி பொலிஸ் நிலையம் மீது தாக்குதலை நடத்தினர். இத் தாக்குதலின் போது பொலிஸ் கட்டிடங்களில் ஒன்று குண்டுவைத்து தகர்க்கப்பட்டது. சுமார் அரை மணி நேரம்வரை நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 9 கமாண்டோ பொலிஸார் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். பொலிஸ் நிலையத்தை தாக்கி சேதமாக்கிய பின் எமது கெரில்லா வீரர்கள் மதவாச்சி புகையிரத நிலையம்மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

மதவாச்சி புகைரத நிலையமானது வட மத்திய மாகாணத்தில் இராணுவக் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த மையமாகும். இங்கிருந்து தான் சிங்களத் துருப்புகள் தமிழ் மாவட்டங்களுக்கு ரயில்மார்க்கமாக அனுப்பப்படுவதுண்டு. இந்தப் புகைரத நிலையத்தை விடுதலைப் புலி வீரர்கள் குண்டுவைத்துத் தகர்த்தனர். புகைரதப் பாதைகளும் நிர்மூலமாக்கப்பட்டன. இதனையடுத்து மதவாச்சி நகரத்திலுள்ள முக்கிய வர்த்தக நிலையங்களையும் எமது கெரில்லா வீரர்கள் குண்டுகளை வைத்து தகர்தெறிந்தனர்.

அண்மைமிக் காலமாக மதவாச்சி சிங்கள ஆக்கிரமிப்பின் தளப் பிரதேசமாக இருந்துவந்தது. இங்கிருந்து தான் பராக்கிர இராணுவ அணியைச் சேர்ந்த சிங்களத் துருப்புகளும் சிங்களக் காடையர்களும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய தமிழ்ப் பகுதிகளுக்கு பிரவேசித்து பெரும் அட்டூழியங்கள் புரிந்துவந்தனர். இந்த இராணுவக் கொடுமைகள் காரணமாகவே மன்னாரிலிருந்து தமிழ் மக்கள் அகதிகளாக தமிழ் நாட்டில் தஞ்சம்புகத் தொடங்கினர்.

படிப்பகம்

www.padippakam.com

மதவாச்சி நகரம்மீது நாம் நடத்திய தாக்குதல் சிங்கள அரசுக்கு ஒரு எச்சரிக்கை நடவடிக்கையாகும். இரண்டு இலட்சம் சிங்களவர்களுக்கு பயிற்சி அளித்து, ஆயுதம் தரித்து தமிழ்ப் பகுதிகளுக்குள் குடியேற்ற திட்டமிட்டு வந்த சிங்கள அரசுக்கு எமது தாக்குதல் பேரதிர்ச்சியாக அமைந்தது. எந்த நேரத்திலும் சிங்களப் பிரதேசங்கள் தாக்கப்படலாம் என்பதையும், சிங்களப் பிரதேசங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதையும், சிங்கள அரசுக்கு நாம் உணர்த்தியதோடு தமிழ்ப் பிரதேசத்தினுள் சிங்களவரைக் குடியேற்றும் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கமாகவும் இத் தாக்குதலை நாம் மேற்கொண்டோம்.

(எஸ். சுப்பிரமணியம்)
அரசியற்பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

Thamilar Nallanpuri Mantram

படிப்பகம்